[10th July 1957

SRI A. R. SUBBIAH MUDALIAR : சப்ளை செலவிலும் ஹில்ட் இனியரன்ஸ் செய்ய பைலட் ஸ்கீமில் அமுல் நடத்த சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சப்ளை சேனல், ஏரி, குளங்கள் போல அல்ல. சிற்சில ஏரிகளில்தான் மண் சேர்கிறது. அதை அப்போதைக்கப்போது எடுத்துவிடவேண்டும். இந்தத் திட்டத்திலே சானல்களை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : சில சில சிறு ஏரிகளை ஐந்து வருஷத்திற்கு ஒரு முறைதான் மராமத்து செய்யவேண்டுமென்று போர்ட் ஆர்டர் இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்த மராமத்து வேலை ஐந்து வருஷத்திற்குப் பிற்பாடுதான் ஆரம்பிக்கப்படுகிறது. இவைகளில் சில ஏரி கரைகள் மணற் பாங்கானதாக இருப்பதால் இரண்டு வருஷத்திற்குள் பழுது பார்க்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அம்மாதிரியான மணற்பாங்கான ஏரிகளை ஐந்து வருஷம் முடிய வேண்டுமென்று எதிர்பார்க்காமல் கூடிய சீக்கிரம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட நீர்ப்பாசனங்களைப்பற்றி ஐந்து வருஷத்திற்கு முன்பாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI P. VEDAMANICKAM : தலைவர் அவர்களே, ஏரி குளங்களிலுள்ள மேல்புல், மீன்கள் பட்டாதார்களுக்குச் சொந்தமா அல்லது பட்டா இல்லாதவர்களுக்குப் பங்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். இதைப்பற்றி கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

SRI V. SUBBIAH : முன்பு இனாம்தார்கள் ஜமீன்தார்கள் ஆட்சேபணையின்பேரில், குளங்கள் மராமத்துக்கு எஸ்டிமேட் தயாரித்திருந்தும் அவைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவைகளை இப்போது எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜமீன் கிராமங்களில்கூட விசேஷ " புட் ப்ரொடக்ஷன் " இலாகா இருக்கிறது. அவர்கள் மராமத்து விஷயத்தைப்பற்றியும் கவனித்து நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறார்கள்.

Headquarters Hospital at Chingleput.

* 83 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state when the proposal to construct a new Headquarters Hospital at Chingleput will materialize?

THE HON. SRI M. A. MANICKAVELU : The proposal is under that active consideration of the Government.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : This has been under the active consideration of the Government for a long time, even though many have contributed large sums of money for the purpose. Will the Hon. the Minister tell us when exactly he will be in a position to complete the construction?

THE HON. SRI M. A. MANICKAVELU : The contribution so far made is about 4½ lakhs of rupees and it is proposed to make use of about 4 lakhs of rupees from another item which is meant for improvement of hospitals. The original proposal was to spend

10th July 1957]

23·24 lakhs. Now it is proposed to reduce the estimate to 10 lakhs. Otherwise, we have to find about 15 lakhs of rupees more. Therefore, the question is being examined. There is no difficulty about providing the hospital at a cost of 10 lakhs. But there will be difficulty if it goes beyond 10 lakhs.

Encroachments near temples.

* 84 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to bring in a comprehensive legislation providing for the removal of encroachments near temples?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes, Sir.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* PREVALENCE OF FAMINE CONDITIONS IN TIRUNELVELI DISTRICT.

Mr. SPEAKER : The hon. Member, Sri M. S. Selvarajan, has given notice of a motion under Rule 40 of the Assembly Rules. I hope the Hon. the Minister for Revenue is ready with the statement. 9-40 a.m.

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes, Sir.

Sri M. S. SELVARAJAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance, viz.

" the prevalence of acute famine conditions in certain taluks of Tirunelveli district and relief measures undertaken by the Government ".

கனம் சபாநாயகர் அவர்களே, இடிக்கும், மின்னலுக்கும், மழைக்கும் இடையிலே இருந்துகொண்டு, பஞ்சத்தைப்பற்றி நினைப்பது என்பது கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் திருநெல்வேலி ஜில்லாவில் வறட்சிக்குட்பட்ட பல பகுதிகள் இருக்கின்றன. நல்ல செழிப்பாக இருந்த தாலூகாவில்கூட சில பகுதிகள் தொடர்ந்த வறட்சி காரணமாக பஞ்சத்திற்குட்பட்டிருக்கிறது. திருநெல்வேலி தாலூகா, அம்பா சமுத்திரத்தில் சில பகுதிகள், நாங்குநேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் முதலிய இடங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. முன்பு திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டி தாலூகாதான் மிகவும் வறட்சியான பிரதேசம். இப்போது இது "கிரானிக் டிஸீஸ்" தொத்து நோய் போல தொடர்ந்து மற்ற பல தாலூகாக்களிலும் இந்த வறட்சி நீடிக்கிறது கடந்த பல வருஷங்களாக. இந்த மோஷன் சில மாதங்களுக்கு முன் கொடுத்தது. அதன் பின்னர் சில பகுதிகளில் நிலைமை சீர்பட்டு வருகிறது. நமது அரசாங்கம் ஓரளவுக்கு பஞ்ச நிவாரண வேலைகளைத் தொடங்கி இருக்கிறார்கள். அதிகாரிகள் பழைய கால " பேமின் கோடை " வைத்துக் கொண்டு, அதற்கு உட்பட்டு சில பகுதிகளைப் பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்த முடியாததால், அந்தப் பிரதேசங்களில் உடனடியாக பஞ்ச நிவாரண வேலைகளுக்கான நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏற்படுகிறது. பழைய " பேமின் கோடை "